**ஏப்ரல் – 13**

**"நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை." - யோவா 6 : 53**

பிரியமான கர்த்தாவே நாங்கள் நீதிமான்களாக்கப்படுவதற்காக எங்களுக்காக பலியிடப்பட்ட உம்முடைய சுத்தமான சுபாவத்தின் புண்ணியத்தை சந்தோஷமாகப் புசிக்கிறோம். (எங்களுடைய தேவைகளுக்குத் தக்கதாக எங்களுக்காக்கிக் கொள்ளுகிறோம்) குறித்த காலத்தில் உம்மோடு ஆளுகையும் செய்யலாமென்றும், நித்தியமாக வருங்காலத்தில் உம்மோடு ஜீவிக்கலாம் என்றும், உம்மைப் போல இருந்து உம்முடைய மணவாட்டியாக உமது அன்பையும், மகிமையையும் உம்மோடு பாடுகளை அனுபவிக்க இது ஒரு பாக்கியமான சலுகையாக உணர்ந்து, சந்தோஷமாக உம்மோடும், பாடுகளின் பாத்திரத்திலும் பங்கு கொள்ளுவோம். அந்த அடையாளத்தை செய்வது மாத்திரமல்ல, ஆனால் அதன் உண்மை நிலையை செய்வதில் உண்மையாய் இருப்பது - ஆகா! எவ்வளவு சந்தோஷம்! பாக்கியமுள்ள கர்த்தாவே, "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்ககள் பெறுவீர்கள்" என்று சொல்லுகிற உம்முடைய வார்த்தையைக் கேட்கிறோம். கர்த்தாவே இவ்விதமாக பலியிட எங்களாலே கூடாதவர்களாக இருக்கிறோம். ஆனால் உமது கிருபை எங்களுக்குப் போதுமானதாக இருக்கிறது. ஏனெனில், இப்பொழுதும் எப்பொழுதும் நாங்கள் முற்றிலுமாக உம்முடையவர்களாக இருக்கிறோம். **-Z '99, 51 (R 2436).**

விசுவாசத்தினாலே அவருடைய மனுஷீகத்தின் ஒரு பாகத்தை நாமே உபயோகித்துக் கொள்ளுவதே, மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசிப்பது குறிக்கிறது. விசுவாசத்தினாலே அவருடைய பூரண ஜீவனின் ஒரு பாகத்தை நாமே உபயோகித்துக் கொள்ளுவதே, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவதைக் குறிக்கிறது. இவ்விதமாக ஆதாமின் பாவத்தின் காரணமாக நாம் பட்ட நமது கடனின் சரியான சமமானதை கிறிஸ்துவிலிருந்து உபயோகித்துக் கொள்ளுகிறோம். இவ்விதமாக நாமே உபயோகித்துக் கொள்ளுகிற அவருடைய பூரண மனுஷீகமும், ஜீவனும், நாம் பூரணராகவும் பூரண ஜீவனை உடையவர்களாகவும் இருக்கிறோம் என்று எண்ணப்படுகிறோம். இப்படி உபயோகித்துக் கொள்ளாவிடில், ஆதாமிலே மரித்தவர்களாக இருக்கிறோம். நம்மில் ஜீவனில்லை. ஆனால் இதை உபயோகித்துக் கொள்ளுகிறதினால் நம்மில் ஜீவனிருக்கிறது. அவருடைய மாம்சத்தைப் புசிப்பதும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவதும், விசேஷமாகப் பிந்தினது, பலியின் மரணத்தில் ஒரு பாகத்துக்கு அவரோடு பங்கு கொள்ளுவதையும் குறிக்கிறது. **-P '33, 63.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**மத் 26:26-28; 1கொரி 11:23-29; யோவா 6:47-58; 1கொரி 10:16; ரோம 6:3-10;8:10; 1கொரி 15:29-34; கொலோ 1:24; 2தீமோ 2:10-12; எபி 13:13-16. கோபுர வாசிப்பு : Z '13, 328 (R 5342).**

**வினாக்கள் :** நான் இந்த வாரத்தில் அவருடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணினேனா? எப்படி? ஏன்? என்ன பலன்களை அடைந்தேன்?